CHURCH OF SOUTH INDIA-DIOCESE OF MADRAS

**BOARD OF MISSION AND EVANGELISM**

# CSI படப்பை குருசேகரம் கிறிஸ்து நாதர் ஆலயம்

**படப்பை**

**நாள் : 02.08.2026 ஞாயிற்றுக்கிழமை**

**நேரம் : காலை 7.30 மணி முதல்**

# MISSION FESTIVAL - 2026
# நற்செய்தி பெருவிழா - 2026

**செம்பொருள் : "செல் சொல்" - மாற்கு 16:15**

**Theme : "Go Tell" -** Mark 16:15

**பேராய நற்செய்தி பணி வாரியத்திற்காக**

**பேராய நற்செய்தி பணி வாரியத்தை வழிநடத்தும்**

**பேராயர், இயக்குநர், இணை இயக்குநர்கள்,**

**குழு தலைவர்களுக்காக, 135 மிஷனெரிகளுக்காக,**

**திருமறை பணிப்பெண்கள்,**

**ஆத்தும ஆதாய பணிகள், ஆலயம் கட்டும் பணிகள்**

**சமூக பணிகள்**

ஜெபிப்போம் பங்குபெறுவோம்

சரோஜா அச்சகம், படப்பை 9382853469

**தென்னிந்தியத் திருச்சபை - சென்னைப் பேராயம் படப்பை குருசேகரம்**

**CSI கிறிஸ்து நாதர் ஆலயம்,** டேவிட் நகர், படப்பை - 601 301.

# விழுதுகள்


**ஜுலை - 2026**

(உறுப்பினர் பயன்பாட்டிற்கு மட்டும்)

# தடைகளை நீக்கிப்போடுகிறவர் அவர்களுக்கு முன்பாக நடந்து போகிறார்

**மீகா 2 : 13**

**மீகா 2:13**



## ஆயர் மடல்

அன்பிற்கினிய திருச்சபை குடும்பத்தாரே! உங்கள் அனைவருக்கும் ஜுலை மாத வாழ்த்துக்களையும் தோத்திரத்தையும் உரித்தாக்குகிறேன்.

கடவுளின் அருளால், ஆறு மாதங்களை கடந்து ஏழாம் மாதத்தில் வந்திருக்கிறோம். கர்த்தர் இது வரை நம்மை நடந்தி வந்த பாதைகளுக்கு நன்றி சொல்லி இப்புதிய மாதம் உங்கள் அனைவருக்கும் நன்மைகள் நிறைந்து, இறை ஆசீர் பெருக வாழ்த்துகிறேன்.

மீகா 2:13 ஜுலை மாத வாக்குத்தத்தத்தின்படி கர்த்தர் உங்கள் வாழ்வில் உள்ள தடைகளை நீக்கிப் போடுகிற மாதமாக இருக்கும். இந்த வருடத்தில் ஆறு மாதம் கடந்து விட்டது. இன்னும் என் வாழ்வில், முன்னேறாதபடி பணிகளில் தடைகள், தொழில், பொருளாதாரம், உடல் நலம் மற்றும் ஜெபிக்க ஆவிக்குரிய தடைகள் காணப்படுகின்றதே எனக் கவலைப்படுகிறீர்களா? இந்த தடைகள் நீங்க சரீர பிரகாரமாக போராடி வருகிறீர்கள். ஆனால், எதுவும் நடக்கவில்லை என வேதனைப்படுகிறீர்கள். நீங்கள் செய்ய வேண்டியது : ஆண்டவரைத் தேட வேண்டும், அவரில் நம்பிக்கை கொள்ள வேண்டும், அவரின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, அவர் காட்டும் வழியில் நடக்க வேண்டும் வாழ்க்கை சில நேரம் நம்மை எதிர்பாரா திசையில் திருப்பும் போது எல்லாம் முடிந்து விட்டது என நினைக்கிறோம். ஆனால் முடிவு என்று நாம் நினைக்கும் இடத்தில்தான் கர்த்தர் ஒரு புதிய ஆரம்பத்தை நமக்கு ஏற்படுத்துவார். யோபு பக்தன் அழகாகச் சொல்கிறார் "**தேவரீர் நீர் சகலத்தையும் செய்ய வல்லவர் நீர் செய்ய நினைத்தது ஒரு நாளும் தடைபடாது.**" யோபு42:2 திருமறை முழுவதும் நாம் பார்க்கும்போது எப்பொழுதெல்லாம் பிரச்சினைகள் ஏற்படுகிறதோ, கடவுள் செய்யும் முதல் காரியம் அங்கு ஜெபிக்கிற ஒருவரைத் தேடுவது தான். நம் எதிராளியான சாத்தான் பயப்படுகிற ஒரு காரியம் என்ன தெரியுமா ? அது உங்கள் ஜெபம் தான். ஜெபத்தின் வழியாக நம் வாழ்வில் உள்ள இருளான தடைகளை வெற்றிக் கொள்ள முடியும். தானியேல் புத்தகம் 10ஆம் அதிகாரத்தில் தானியேல் தன் மக்களுக்காக அவர்கள் தடைகள் நீங்க மூன்று வாரம் 21 நாட்கள் கர்த்தரைத் தேடி உபவாசித்து ஜெபித்து ஜெயமெடுப்பதைக் காண்கிறோம். எனவே, நம் முன்னே தெரிகின்ற தடைகளைக் கண்டு பயப்படத்தேவையில்லை. அவற்றை கர்த்தருடைய வாக்குதத்தங்களைக் பற்றிக் கொண்டு ஜெபிப்போம் ஜெயமெடுப்போம். "**விசுவாசத்தை தொடங்குகிறவரும் முடிக்கிறவருமாகிய இயேசுவை நோக்கி நமக்கு நியமித்திருக்கிற ஓட்டதில் பொறுமையோடே ஓடக்கடவோம்.**" எபிரேயர் 12:2 கடவுள் நம்முடன் துணையிருப்பார் மூவொரு கடவுளின் ஆசீர் நம் அனைவரோடும் இருப்பதாக.



**முப்பெரும் விழா : சாலமங்கலம்**

கர்த்தருடைய பெரிதான கிருபையால் கடந்த 11.06.2026 அன்று சாலமங்கலத்தில் நமது கிராமத் திருச்சபையான **CSI** தூய பேதுரு ஆலய இறை ஒப்படைப்பு, திடப்படுத்தல் வழிபாடு, தையற் பயிற்சி முடித்த 52 பயனாளிகளுக்கு சான்றிதழ் வழங்கும் முப்பெரும் விழா சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் நமது அன்பு பேராயர் பேரருள்பணி **A. பால் பிரான்சிஸ் ரவிச்சந்திரன்** அவர்கள் மற்றும் பேராயரம்மா அருள்பணி **P. இந்திரா பால்** அவர்களும் மற்றும் பேராயச்செயலர், உப தலைவர், பேராயரின் ஆயர், தெற்கு வட்டாரத் தலைவர் மற்றும் அநேக ஆயர்கள் கலந்து கொண்டார்கள். விருகம்பாக்கம் ஆலய ஆயர், செயலர், பொருளர், ஆண்கள் ஐக்கிய சங்கத்தினர், திருச்சபைமக்கள் பங்கேற்று சிறப்பித்தார்கள். நமது படப்பை கிறிஸ்து நாதர் ஆலய அங்கத்தினர்களும் கிளைத் திருச்சபை ஊழியர்கள், இறைமக்கள் திரளாக பங்கேற்றார்கள். அனைத்து நிகழ்வுகளும் சிறப்பாக நடைபெறுவதற்கு ஆலோசனைகள் வழங்கி உற்சாகமாய் செயல்பட்ட சிறப்பு குழுவினர்களுக்கும் ஆயரோடு இணைந்து அர்ப்பணிப்போடு அயராது உழைத்த குருசேகர செயலர், பொருளர், சேகர குழுவினர்கள், ஐக்கிய சங்கத்தினர் அனைவரையும் அன்புடன் வாழ்த்துகிறேன். இந்த மாபெரும் ஆலயக் கட்டுமானப் பணிக்கு ஜெபித்த, கொடுத்த, உழைத்த படப்பை சபையாருக்கும் அனைத்து நல் உள்ளங்களுக்கும் நன்றிகளை உரித்தாக்குகிறேன். எல்லா துதியும் கனமும் மகிமையும் கடவுளுக்கே உரித்தாகுக!

**நற்செய்தி பெருவிழா 2026**

நமது படப்பை குருசேகரத்தில் 02.08.2026 அன்று நற்செய்தி பெருவிழா அனுசரிக்க திட்டமிட்டுள்ளேம். ஒவ்வொரு ஆண்டும் நமது பேராய நற்செய்தி பணிகளை ஊக்குவிக்கவும் பேராயத்தில் பணியாற்றும் 135 பேராய மிஷனரிகளைத் தாங்கவும், நற்செய்திப் பெருவிழா வரும் ஆகஸ்ட் 2.08.2026 ஞாயிறன்று நமது படப்பை ஆலயத்தில் காலை 7.30 மணிக்கு தொடங்கி நடைபெறும். நமது பேராய நற்செய்திப் பணித்தளங்களில் ஊழியம் செய்யும் நற்செய்தி மிஷனரிகளுக்காக ஜெபிப்போம். 15 ஜெபக்குழுக்களுக்காக, 875 கிராமங்களில் நடைபெறும் மிஷனெரி திருப்பணிகளைத் தாங்கும் வண்ணம் சிறப்பு விற்பனை விழா மற்றும் ஏலபொருட்கள் வைத்து நிதிவளம் சேர்க்க தங்கள் உதாரத்துவமான காணிக்கைகளால் தாங்க முன்வரும்படி அன்புடன் அழைக்கிறோம். அனைத்து ஐக்கியக் குழுக்களும் ஸ்டால்கள் வைக்கவும், குடும்பமாய் நற்செய்தி பெருவிழா விற்பனை விழாவில் பங்கேற்று இறை ஆசி பெற அனைவரையும் அன்புடன் அழைக்கிறேன்.ஜெபியுங்கள்! பங்கு பெறுங்கள்!

இம்மாதம் பிறந்தநாள் மற்றும் திருமணநாள் காணும் திருச்சபை விசுவாசிகள் அனைவரையும் இறைமகன் திருப்பெயரில் வாழ்த்துகிறேன்!

இறைபணியில்

அருள்திரு. **Y. தேவகுமார்**

ஆயர்



# பெண்கள் பகுதி

மார்த்தாவிடமிருந்து நாம் கற்றுக்கொள்ளும் நான்கு வாழ்க்கைப் பாடங்கள்

வேதாகமப் பகுதி: லூக்கா 10:38–42; யோவான் 11:17–44

வேதாகமத்தில் குறிப்பிடப்படும் பெண்களில் மார்த்தா மிகவும் குறிப்பிடத்தக்கவர். பலர் மார்த்தாவை வேலைப்பளுவில் மூழ்கியிருந்த பெண்ணாக மட்டுமே நினைக்கிறார்கள். ஆனால், அவளுடைய வாழ்க்கையை முழுமையாகப் பார்க்கும்போது, இயேசுவின் சந்நிதியில் வளர்ந்து, உறுதியான விசுவாசமுள்ள சீஷையாக மாறிய ஒருவரை நாம் காண்கிறோம். லூக்கா 10-ஆம் அதிகாரத்தில் நாம் சந்திக்கும் மார்த்தாவும், யோவான் 1 1 -ஆம் அதிகாரத்தில் லாசருவின் கல்லறையின் அருகில் நிற்கும் மார்த்தாவும் ஒரே நபர்தான். ஆனால் அவளுடைய ஆவிக்குரிய வளர்ச்சி மிகவும் தெளிவாக வெளிப்படுகிறது. ஆரம்பத்தில் கவலையாலும் வேலைப்பளுவாலும் சோர்ந்திருந்த அவள், பின்னர் இயேசுவே கிறிஸ்து என்று தைரியமாக அறிக்கையிடும் விசுவாசமுள்ள பெண்ணாக மாறினாள். இந்த மாற்றம் நமக்கும் நான்கு முக்கியமான வாழ்க்கைப் பாடங்களைக் கற்றுத்தருகிறது. 1.நம்முடைய பிரச்சனைகளை நேராக இயேசுவிடம் கொண்டு செல்ல வேண்டும் மரியாள் இயேசுவின் பாதத்தில் அமர்ந்து அவருடைய வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டிருந்தாள். ஆனால் மார்த்தா வீட்டு வேலைகளில் மிகவும் பிஸியாக இருந்தாள். இறுதியில், அவள் தன் வருத்தத்தை இயேசுவிடம் கொண்டு சென்றாள். இயேசு அவளிடம்,"மார்த்தாளே, மார்த்தாளே, நீ அநேக காரியங்களைக்குறித்து கவலையும் கலக்கமும் அடைகிறாய்; ஆனால் ஒன்று மட்டுமே அவசியம்."என்று கூறினார்.மார்த்தா உதவி கேட்டு வந்தாள்; ஆனால் இயேசு அவளுடைய இதயத்தையே சீர்செய்தார். அவள் எதிர்பார்த்த பதிலை அல்ல, அவளுக்குத் தேவையான பதிலை ஆண்டவர் கொடுத்தார்.நாமும் பல நேரங்களில், "ஆண்டவரே, இந்தப் பிரச்சனையை நீக்குங்கள்" என்று ஜெபிக்கிறோம். ஆனால் தேவன் சில சமயங்களில் சூழ்நிலையை மாற்றாமல், நம்மையே மாற்றுகிறார். அவர் நம்முடைய பார்வையையும் முன்னுரிமைகளையும் மாற்றுகிறார்.வாழ்க்கைப் பயன்பாடு:எந்தச் சூழ்நிலையிலும் முதலில் ஆண்டவரிடம் செல்லுங்கள். அவர் தரும் பதில் உங்கள் விருப்பத்திற்கேற்ப இல்லாவிட்டாலும், அது எப்போதும் உங்கள் நன்மைக்காக இருக்கும். 2.தேவனுடைய சந்நிதியில் தைரியமாக வர வேண்டும் மார்த்தா இயேசுவிடம் தனது மனவேதனையை மறைக்கவில்லை. "ஆண்டவரே, நீர் கவலைப்படவில்லையா?" என்று கூடக் கேட்டாள். இது அவளுக்கும் இயேசுவுக்கும் இடையிலான நெருக்கமான உறவைக் காட்டுகிறது. இன்றும் பலர் தேவனிடம் உண்மையான உணர்வுகளை வெளிப்படுத்தத் தயங்குகிறார்கள். ஆனால் தேவன் நம்முடைய இதயத்தை ஏற்கனவே அறிந்திருக்கிறார். ஆகவே, நம்முடைய கண்ணீர், சந்தேகம், பயம், வேதனை, மகிழ்ச்சி அனைத்தையும் அவரிடம் சொல்லலாம். எபிரெயர் 4:16 நம்மை கிருபாசனத்தண்டைக்கு தைரியமாக வரும்படி அழைக்கிறது. தேவனுடைய சந்நிதியில் மறைப்பதற்கு எதுவும் இல்லை. வாழ்க்கைப் பயன்பாடு:தினமும் ஜெபத்தில் தேவனோடு உரையாடுங்கள். அவரிடம் மனதை முழுமையாகத் திறந்து பேசுங்கள். அங்கேதான் உண்மையான ஆறுதலும் பலனும் கிடைக்கிறது.



3. தேவனுடைய சந்நிதியை முதன்மையாகத் தேட வேண்டும் இயேசு கூறிய "ஒன்று மட்டுமே அவசியம்" என்ற வார்த்தை, மார்த்தாவின் வாழ்க்கையை மாற்றியது. சேவை முக்கியமானது. ஆனால் சேவையைவிட ஆண்டவருடைய சந்நிதி முக்கியமானது. ஆராதனையில்லாத ஊழியம் சோர்வை உண்டாக்கும். ஜெபமில்லாத ஊழியம் வெறுமையாகிவிடும். தேவனுடைய சந்நிதியில் புதுப்பிக்கப்படாத வாழ்க்கை விரைவில் களைப்படைந்துவிடும். மரியாள் சரியான நேரத்தில் சரியான தேர்வைச் செய்தாள். அதனால் இயேசு அவளைப் பாராட்டினார்.இன்று நமது வாழ்க்கையிலும் வேலை, குடும்பம், ஊழியம், பொறுப்புகள் ஆகியவற்றுக்கு இடையில் தேவனுக்கான நேரத்தை நாம் ஒதுக்குகிறோமா என்று சிந்திக்க வேண்டும். வாழ்க்கைப் பயன்பாடு:ஒவ்வொரு நாளும் வேதாகம வாசிப்புக்கும் ஜெபத்திற்கும் தனி நேரம் ஒதுக்குங்கள். தேவனுடைய சமாதானம் உங்கள் வாழ்க்கையை வழிநடத்தும். 4. விசுவாசத்தில் வளர வேண்டும்யோவான் 11-ஆம் அதிகாரத்தில் நாம் ஒரு புதிய மார்த்தாவைப் பார்க்கிறோம். லாசரு இறந்துவிட்டான். நான்கு நாட்கள் கடந்துவிட்டன. எல்லா நம்பிக்கையும் முடிந்துவிட்டது என்று மனிதர்கள் நினைத்தார்கள்.ஆனால் மார்த்தா,"இப்பொழுதும் நீர் தேவனிடத்தில் எதைக் கேட்டாலும் தேவன் உமக்குக் கொடுப்பார் என்று நான் அறிந்திருக்கிறேன்."என்று கூறினாள்.பின்னர்,"நீரே கிறிஸ்து, உலகத்திற்கு வருகிற தேவகுமாரன்."என்று தன்னுடைய விசுவாசத்தை அறிக்கையிட்டாள்.இது சாதாரண அறிக்கை அல்ல. இது ஆழமான விசுவாசத்தின் வெளிப்பாடு. கல்லறையின் அருகில் ஒரு கணம் அவள் தளர்ந்தாலும், இயேசு, "விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய்" என்று அவளை உறுதிப்படுத்தினார். அதன் பிறகு லாசரு உயிரோடு வெளியே வந்தான். மார்த்தாவின் வாழ்க்கை நமக்குச் சொல்லும் செய்தி என்னவென்றால், விசுவாசம் ஒரே நாளில் வளராது. இயேசுவோடு தொடர்ந்து நடந்தால், ஒவ்வொரு சோதனையும் நமது விசுவாசத்தை வலிமைப்படுத்தும்.

<u>முடிவுரை</u> : மார்த்தா முழுமையானவள் அல்ல. அவளுக்கும் கவலை இருந்தது. அவளுக்கும் ஏமாற்றம் இருந்தது. சில நேரங்களில் அவளுடைய விசுவாசமும் தளர்ந்தது. இருந்தாலும், அவள் இயேசுவை விட்டு விலகவில்லை. ஒவ்வொரு முறையும் அவரிடமே வந்தாள். அதனால்தான் அவள் மாற்றப்பட்டாள்.நாமும் இன்று நம்முடைய வாழ்க்கையை ஆராய்வோம். நமது பிரச்சனைகளை இயேசுவிடம் கொண்டு செல்கிறோமா? அவருடைய சந்நிதியில் தைரியமாக வருகிறோமா? அவருடைய சந்நிதியை முதன்மைப்படுத்துகிறோமா?- நாளுக்கு நாள் விசுவாசத்தில் வளருகிறோமா? இந்த நான்கு பாடங்களையும் வாழ்க்கையில் கடைப்பிடித்தால், மார்த்தாவைப் போல நாமும் தேவனுடைய மகிமையைக் காண்போம். நமது வாழ்க்கை, குடும்பம், ஊழியம் ஆகிய அனைத்திலும் ஆண்டவர் தம்முடைய கிருபையையும் வல்லமையையும் வெளிப்படுத்துவார்.

**திருமதி. ஜாய்சிலின் தேவகுமார்**
**ஆயரம்மா**

## 2026 – ஜுலை மாத ஆராதனை ஒழுங்குகள்

| நாள்/கிழமை | திருமறைப்பாடம் | இறைசெய்தித் தலைப்பு | நடத்துனர்/செய்தியாளர் |
|---|---|---|---|
| 01-07-2026<br>புதன்கிழமை<br>காலை 6.00 | மாதப்பிறப்பு<br>திருவிருந்து வழிபாடு | | ஆயர் |
| 05-07-2026<br>ஞாயிறு<br>காலை 8.30<br>**திருவிருந்து வழிபாடு** | விடுதலைப் பயணம் 31:1–11<br>கொலோசெயர் 3: 22–25<br>திருப்பாடல்கள் 104: 1–24<br>லூக்கா 17: 7–10 | **உழைப்பே வழிபாடு: நமது பணியில் கடவுளை கனப்படுத்துவோம்** | ஆயர் |
| 11-07-2026<br>சனிக்கிழமை<br>காலை 10.00 | **ஜுலை மாத உபவாசக் கூடுகை**<br>இறைச்செய்தி ***திரு. ஜோஸ்வா*** அவர்கள் | | |
| 12-07-2026<br>ஞாயிறு<br>காலை 8.30 | ஏசாயா 58:6–10<br>1 யோவான் 3: 16–18<br>திருப்பாடல்கள் 82<br>மத்தேயு 9: 35–38 | **அருள்பணி : இரக்கத்தின் செயல்வடிவம்** | திரு. ஈஸ்வரதாஸ் |
| 19-07-2026<br>ஞாயிறு<br>காலை 8.30<br>**திருவிருந்து வழிபாடு** | எரேமியா 1:4–10<br>பேதுரு 5 : 1–4<br>திருப்பாடல்கள் 132<br>மத்தேயு 20 : 20–28 | **அருட்பொழிவு திருப்பணி : புகழ்ச்சிக்கல்ல : பணி செய்ய அழைப்பு** | அருள்திரு.<br>**ஃப்ரான்சிஸ் தேவகுமார்**<br>தண்டுரை குருசேகரம் |
| 26-07-2026<br>ஞாயிறு<br>காலை 8.30 | சபை உரையாளர் 4:9–12<br>எபேசியர் 5: 21–33<br>திருப்பாடல்கள் 128<br>மத்தேயு 19: 4–6 | **திருமணம் : ஒன்றித்த பங்களிப்பின் கொண்டாட்டம்** | திரு. யோகராஜ் |



## கிளை திருச்சபைகள் – வழிபாட்டு ஒழுங்குகள் – ஜுலை 2026

| நாள் | சாலமங்கலம் | வடமேல்பாக்கம் | பேரிஞ்சம்பாக்கம் | சென்னாகுப்பம் | பனையூர் | நாவலூர் |
|---|---|---|---|---|---|---|
| 01.07.2026<br>புதன் | திரு. மனோவா | திரு. மோசஸ் | திருமதி. எஸ்தர் ஸ்வர்ணலதா | திருமதி. பமிலா | திரு. பாக்கியராஜ் | திரு. சாலமோன் |
| 05.07.2026<br>ஞாயிறு | திருவிருந்து வழிபாடு ஆயர் | திருவிருந்து வழிபாடு ஆயர் | திருமதி. எஸ்தர் ஸ்வர்ணலதா | திருமதி. பமிலா | திரு. பாக்கியராஜ் | திரு. சாலமோன் |
| 12.07.2026<br>ஞாயிறு | திரு. கிரிஸ் டேவிடார் | திரு. பெனடிக்ட் ஆபிரகாம் | திரு. முத்துராஜ் | திரு. எட்வர்டு காலின்ஸ் | திரு. கனகராஜ் | திரு. பிரேம்குமார் |
| 19.07.2026<br>ஞாயிறு | திரு. லூக் ஜெயராஜன் | திருமதி. நிறைமொழி பெனடிக்ட் | திருவிருந்து வழிபாடு ஆயர் காலை 7.00 மணி | திரு.பால்ராஜ் | திருமதி. மாலினி ரூபஷ் | திரு. முத்துராஜ் |
| 26.07.2026<br>ஞாயிறு | Dr கிருஸ்டோபர் பாஸ்கரன் | திரு. கிரிஸ் டேவிடார் | திருமதி. ஜெயலட்சுமி | திருவிருந்து வழிபாடு ஆயர் காலை 9.00 | திருவிருந்து வழிபாடு ஆயர் காலை 10.00 | திருவிருந்து வழிபாடு ஆயர் காலை 8.00 |

## ஜுலை – 2026 தங்கள் பிறந்த நாள் காணுவோர் :

"உன் சுகவாழ்வு சீக்கிரத்தில் துளிர்க்கும்". ஏசாயா 58:8

1 செல்வன். நித்தின் ஃபிரட்ரிக்
திருமதி. லீனா ஜெயராஜ்
திருமதி. கனகவள்ளி

2 திரு. சாம் விக்டர்
திருமதி. ஷர்லி ஏஞ்சல் லாரன்ஸ்

3 செல்வன். அபிஷேக் அமிர்தம்
செல்வி. சாரா சுகந்தி
திரு. நித்யானந்தன்
செல்வி. ஜெனிஃபர்

4 திரு. ஜெயராஜ் ராஜன்
திரு. ஸ்டான்லி ராஜ்குமார்

5 செல்வன். ஜோன் பிரேடன் டேவிட்
திருமதி. ஹில்டா குமாரி
திரு. ராஜன் ஜான்
குழந்தை. நிலன் ஜோனஸ்

6 செல்வன். ஏட்ரியல் திமோத்தி
திருமதி. ஜெயராணி விக்டர்
திருமதி. கிரேஸ் மேபல் ஷெரின்
திருமதி. பொன்மலர் நான்சி சுரேஷ் ராஜன்
செல்வி. கேத்ரின் செல்வி

7 செல்வி. அக்யிலா கிரேஷியா

8 திருமதி. எஸ்தர்
திருமதி. ஷீபா டேவிட்
திரு. சந்திரன் டேனியல்
திரு. பிரேம்சந்த்

9 திரு. பிரின்ஸ் பிரபாகரன்
திருமதி. நிஷா கோயில்பிள்ளை

10 குழந்தை. ஆதிரா
திரு. சார்லஸ்
திருமதி. கிரேஸ் பிரெளவ்னிங்

11 செல்வி. ஆலின் ரோஸ்
திருமதி. நிர்மலா ஆபிரகாம்

12 திரு. ஜேம்ஸ்
திரு. நிர்வான் சாலமோன் சிகா
திரு. மேஷாக் ஜோன்ஸ்
திருமதி. ரோஸ்மேரி

13 செல்வி. ஃபெல்சியா ஷெர்லி
குழந்தை. ஜெஸ்லின் அன்யா
திருமதி. ரமணா எடி

14 திருமதி. மேன்சி அம்புரோஸ்
திரு. பெனியேல் கிருபாகரன்

15 திருமதி. மேரி ஸ்டெல்லா ஜான்
செல்வன். அன்புராஜன்
குழந்தை. ஜெசிந்தா கரோலின்

16 திரு. ராஜ் A.V.
திரு. சாலமோன்

17 செல்வன். சாமுவேல் ஜோனத்தான்

18 திரு. ஜீவா
திருமதி. டாரதி ஸ்டீபன்

19 செல்வன். மனோவா வில்ஃப்ரட்

20 திருமதி. வசந்தகுமாரி ராஜாசிங்
குழந்தை. ஜோவ்லின் ஃபுளோரிடா பியர்ஸ்
திரு. ஜோனத்தான் பெனட்

21 திரு. ராகேஷ் (எ) ஐசக்
திரு. ஷர்மா டேவிட்
செல்வன். ரூபன்ராஜ்

23 செல்வன். பிளஸ்வின்
செல்வி. பிரபெல் திமோத்தி
செல்வி. ஜெஸிகா
செல்வன். புஷ்பராஜ்
திரு. சாமுவேல் பால்தாஸ்

24 திருமதி. இந்திரா பிரின்ஸ்

25 திருமதி. கிறிஸ்டி பிரசாத்
செல்வி. நிஷா சர்குணர்

26 திருமதி. ரேவதி ராகேஷ்
திருமதி. ரோஸி மலர்விழி

28 திருமதி. ஷாலினி சாமுவேல்

29 திருமதி. நிறைமொழி பெனடிக்ட்
திரு. ஜெயசிங்

30 செல்வி. அஸ்லியா
திருமதி. ரம்யா ரேச்சல் ஜீவா
செல்வன். சாம்சன்
டாக்டர். ராபர்ட் ஆபிரகாம்
திருமதி. ஆலிவ் எபன் ஜெயலிஸி

31 திரு. அனீஷ்குமார்



## ஜுலை – 2026 : தங்கள் திருமண நாள் காணுவோர் :

"எண்ணிமுடியாத அதிசயங்களையும் அவர் செய்கிறார்." – யோபு 5:9

01 திரு. ஜேம்ஸ் – திருமதி. கனகவள்ளி தம்பதியினர்

02 திரு. விக்டர் அன்புராஜ் – திருமதி. வெண்ணிலா தம்பதியினர்
திரு. ஆபிரகாம் – திருமதி. ஆனந்த் சிங் தம்பதியினர்
திரு. லாரன்ஸ் – திருமதி. ஷர்லி தம்பதியினர்

07 திரு. ஸ்டான்லி ஜேசுதாசன் – டாக்டர் திருமதி. நிர்மலா தம்பதியினர்

09 திரு. சுரேஷ் – திருமதி. நளினி தம்பதியினர்

10 திரு. வில்ஃபிரட் டேவிடார் – திருமதி. சாந்தி தம்பதியினர்

11 திரு. சாம்சுந்தர் – திருமதி. எஸ்தர் தம்பதியினர்

14 திரு. மனோகரன் – திருமதி. கிருபா தம்பதியினர்
திரு. ராபின் – திருமதி. அமித்தி ராபின் தம்பதியினர்
திரு. சத்தியகுமார் – திருமதி. ரோஸி மலர்விழி தம்பதியினர்

15 திரு. பென்ஜமின் பாஸ்கர் – திருமதி. சாரா தம்பதியினர்
திரு. விவேகன் டேவிட் – திருமதி. கிரேஸ்லின் தம்பதியினர்

16 திரு. லியோ ஞானசிங் – திருமதி. எலிஸா குளோரி தம்பதியினர்

28 திரு. ஜான்சன் – திருமதி. ரோஸ்மேரி தம்பதியினர்

30 திரு. யோகன்னன் – திருமதி. மரியம்மா தம்பதியினர்



## கிளைச்சபைகள் : ஜுலை - 2026

"எண்ணிமுடியாத அதிசயங்களையும் அவர் செய்கிறார்." - யோபு 5:9

### தங்கள் பிறந்த நாள் காணுவோர் :

*வடமேல்பாக்கம்*

10.07. குளோரி
12.07. ஜெலின்
14.07. ராஜேந்திரன்
19.07. இவான்ஜிலின் ரூத்

*சென்னகுப்பம்*

07.07. திரு. எட்வர்ட் காலின்ஸ்
08.07. தஷ்வின் தீனா
15.07. ஆனந்தராஜ்
18.07. திருமதி. ஷர்மிளா



*பனையூர்*

06.07. கல்யாணி
08.07. ராஜசெல்வம்
10.07. தாயம்மாள்
11.07. திரு. இம்மானுவேல்
15.07. திரு. ஜான்சன்
28.07. திரு. சாமுவேல்

*பேரிஞ்சம்பாக்கம்*

04.07. திரு. எத்திராஜ்
திருமதி. இந்திரா
06.07. திரு. எலிசபெத்
09.07. திருமதி. ஜெயலட்சுமி

*சாலமங்கலம்*

01.07. திருமதி. எவரெஸ்ட்
05.07. திருமதி. மேரி ஜோதி
06.07. திருமதி. ஷாலினி ஜெயகுமார்
16.07. திருமதி. டெல்சி தனசேகர்
18.07. திருமதி. ஹெப்சிபா
19.07. திரு. தர்மராஜ்
24.07. திரு. ஜெயராஜ்

### தங்கள் திருமண நாள் காணுவோர் :

*வடமேல்பாக்கம்*

07.07. திரு. ராஜேந்திரன்
திருமதி. ஜான்சி தம்பதியினர்

*பேரிஞ்சம்பாக்கம்*

04.07. திரு. மோகன்ராஜ்
திருமதி. இந்திரா தம்பதியினர்
05.07. திரு. செல்வராஜ்
திருமதி. சத்யா தம்பதியினர்
09.07. திரு. எத்திராஜ்
திருமதி. அற்புதமேரி
தம்பதியினர்

*சாலமங்கலம்*

04.07. திரு. தனபால்
திருமதி. அன்பு நேசமணி
தம்பதியினர்





## ஜுலை மாத வேத வினா பகுதி

### எஸ்றா 1-10

1. "எருசலேமில் வாசம் பண்ணுகிற தேவனே தேவன்" எனக் கூறின ராஜா யார் ?
2. வம்ச அட்டவணையைக் காணாமல் விலக்கப்பட்டவர்கள் யார் ?
3. எந்த பாபிலோன் ராஜா எருசலேம் ஆலயம் கட்டக் கட்டளையிட்டான் ?
4. நியாயப்பிரமாணத்தில் தேறின வேதபாரகனாயிருந்தது யார் ? எந்த வம்சம் ?
5. ஆலயத்துக்கு அஸ்திபாரம் போடும்போது மகா சத்தமாய் அழுதவர்கள் யார் ?
6. எருசலேமிலிருந்த இரு தீர்க்கதரிசிகள் யார் ?
7. அப்பம் புசியாமலும் தண்ணீர் குடியாமலும் துக்கித்துக்கொண்ருந்தவன் யார் ?
8. எது தலைக்குமேல் பெருகிற்று ? எது வானபரியந்தம் வளர்ந்து போயிற்று?
9. எங்கு மூன்று நாள் தங்கினார்கள்?அதில் யாரை காணவில்லை ?
10. நிற்க எங்களாலே கூடாது, இது ஒரு நாள் இரண்டு நாள் வேலையல்ல வாசிப்பதெங்கே.

## வேத வினா : சரியாகப் பொருத்துக.

(எஸ்றா 1-10)

| | | |
|---|---|---|
| 1. கர்த்தர் | X | கொஞ்ச நேரம் கிருபை |
| 2. சிம்சாய் | X | பொக்கிஷக்காரன் |
| 3. எலியேசர் | X | தேவாலயத்துக்கு அஸ்திபாரம் போட்டான் |
| 4. செஸ்பாத்சார் | X | புத்திமான் |
| 5. மித்திரேதாத் | X | கோரேசின் ஆவியை ஏவினார் |
| 6. செரேபியா | X | கணக்கன் |
| 7. அகமேதா அரமனையில் | X | வெண்கலப் பாத்திரம் |
| 8. பொன்னைப் போல பளப்பான் | X | உபவாசம் |
| 9. கொஞ்சம் உயிர் | X | புத்தியுள்ள மனுஷன் |
| 10. அகவா நதியண்டை | X | ஒரு சுருள் அகப்பட்டது. |

திருமதி ராய் டேவிட்

**விடைகளை ஜுலை 25-ம் தேதிக்குள் அனுப்பவும்**

விடைகள் அனுப்பவேண்டிய முகவரி :
**CSI** *கிறிஸ்து நாதர் ஆலயம்*
6/371, ஞானம்மாள் ரோடு, டேவிட் நகர், படப்பை - 601 301.

## ஜூன் மாத வேத வினாப் போட்டி – சரியான விடைகள் :

| | | |
|---|---|---|
| 1. | 2 நாளாகமம்.... 32 : 20 | எசேக்கியா |
| 2. | 2 நாளாகமம்.... 34 : 12 | லேவியர்கள் |
| 3. | 2 நாளாகமம்.... 31 : 3 | நியாயப்பிரமாணத்தின்படி பலிகள் செலுத்த எசேக்கியா |
| 4. | 2 நாளாகமம்.... 33 : 8 | மனாசே |
| 5. | 2 நாளாகமம்.... 34 : 18,19 | நியாயப்பிரமாண புத்தகம் |
| 6. | 2 நாளாகமம்.... 31 : 4,5 | எருசலேமின் குடிகளும், இஸ்ரவேல் புத்திரரும் |
| 7. | 2 நாளாகமம்.... 34 : 25 | யோசியாவில்மேல் |
| 8. | 2 நாளாகமம்.... 36 : 11-16 | சிதேக்கியா ராஜா |
| 9. | 2 நாளாகமம்.... 32 : 29 | எசேக்கியாவுக்கு |
| 10. | 2 நாளாகமம்.... 33 : 12 | மனாசே |

**ஜூன் 2026**

**வேதவினா பகுதிக்கு சரியான விடைகள் அனுப்பியவர்களை வாழ்த்துகிறோம்.**

திருமதி. பானுமதி
திருமதி. ஜெமிமா ஹாப்டே
திருமதி. புதுமை அந்தோணியம்மாள்
திருமதி. ஜாய் கென்னடி
திருமதி. செல்வரூபி ஆண்ட்ரூஸ்
திருமதி. புனிதவதி பால் வீரபாண்டியன்
திருமதி. ரத்னா
திருமதி. மல்லிகா ஸ்டான்லி
திருமதி. ஸ்வினா பிரவின்
திருமதி. எமிலி லில்லி ஜாய்ஸ்
திருமதி. ஆலிவ் பென்
திருமதி. வசந்தி டேவிட்
திருமதி. கிருபாவதி
திருமதி. எமீமாள் வேதநாயகம்
திருமதி. பெரில் பாஸ்கர்
திருமதி. ஸ்டெல்லா மேஷாக்
திருமதி. எஸ்தர் சுந்தர்
திருமதி. ஜெயராணி விக்டர்
திருமதி. ரோஸ்லின் வத்சலா
திருமதி. பொன்மதி தர்மராஜ்
திருமதி. கமலா ஜெரேமியா
திருமதி. மஞ்சு ஆனந்தகுமார்
திருமதி. பிரேமலதா கிறிஸ்டோஃபர்
திருமதி. நிருபா சார்லஸ்
திருமதி. ஏஞ்சல் மேஷாக்
திருமதி. செல்வ குமாரி பிரான்சிஸ்
திருமதி. டாரதி ஸ்டீபன்
திருமதி. அபிகாயில் மனோரஞ்சிதம்
திருமதி. ஜான்சி
திருமதி. கலா இம்மானுவேல்

## கிராம ஊழியம்

**26.07.2026 நான்காம் ஞாயிற்றுக்கிழமை** மாலை 4.00 மணிக்கு **வெண்பாக்கம் நற்செய்திப் பணித்தளத்தில்** கிராம ஊழியம் நடைபெறும். இதில் பங்குபெற அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம். வாகனம் மாலை 3.00 மணிக்கு ஆலயத்திலிருந்து புறப்படும்.



**ஆண்களுக்கான குறுக்கெழுத்துப் போட்டி**

**சரியான விடைகள் அனுப்பியவர்களை வாழ்த்துகிறோம்.**

திரு. ஆனந்தகுமார்
திரு. சாலோன் சந்திரபாபு
திரு. ராஜகுமார்
திரு. சுரேஷ்ராஜா
திரு. அனிஷ்குமார்
திரு. ஸ்டான்லி ராஜ்குமார்
திரு. சாம் மோசஸ்
திரு. ஐசக் டேனியல்
திரு. மிசுர்மராஜ்
திரு. டேனிஸ் பிரபாகர்
திரு. வின்சென்ட் ஜெயராஜ்
திரு. செல்வின் ஜெயகரன்
திரு. ஆண்ட்ரூஸ்
திரு. யுயூக் இம்மானுவேல்
திரு. கிறிஸ்டோபர் அசரியா
திரு. மேஷாக்
திரு. பிரான்சிஸ்
திரு. சாலமோன் வில்லி அபாட்டு
திரு. பால்ராஜ்

**“நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளையெல்லாம் பெறுவீர்கள்.” மத்தேயு 21 : 22**

# ஜூலை மாத உபவாசக் கூடுகை

**11.07.2026 இரண்டாம் சனிக்கிழமை**

காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை

இடம்: **CSI கிறிஸ்து நாதர் ஆலயம்**

படப்பை

**தலைமை :**

**Rev. Y. *தேவகுமார்,***

ஆயர்

சிறப்பு அழைப்பாளர்கள் :

***திரு. ஜோஸ்வா*** அவர்கள்

இனிமையான பாடல்கள், துதி ஆராதனை, விடுதலைக்கான ஜெபம், சாட்சி வேளை, வல்லமையான இறைசெய்தி

*அனைவரும் பங்கேற்று இறையாசி பெற அன்புடன் அழைக்கிறோம்.*

*மதிய உணவு வழங்கப்படும்.*

CSI கிறிஸ்துநாதர் ஆலயம் – படப்பை குருசேகரம்

# குடும்ப ஜெபக்கூடுகை நடைபெறும் இல்லங்கள்

**நாள்: பிரதி வியாழன்    நேரம் : மாலை 7.00 மணி**

## ஜுலை 2026

**02**

*திரு. ஜெரேமியா – திருமதி. கமலா ஜெரேமியா*
நெ. 3/263, நவமணி ரோடு,
டேவிட்நகர், படப்பை – 601 301.
செல். 9791059483

**09**

*திரு. J. ராஜாசாமுவேல் – திருமதி. ஜாய்ஸ்*
பிளாட் நெ. 21, SLS நகர்
சாவடி, செரப்பணஞ்சேரி
படப்பை – 601 301.
செல். 9841047876

**16**

*திரு. பாக்கியநாதன் - திருமதி. பிரேமா ஞானமரி*
பிளாட் நெ. 160, பெத்தேல் வீடு
ஸ்ரீ லெட்சுமி ஹயகிரிவர் நகர்,
ஆரம்பாக்கம்
செல். 9940069075

**23**

*திரு. மேஷாக் - திருமதி. ஸ்டெல்லா*
அண்ணா நகர் 2வது தெரு,
செரப்பணஞ்சேரி
செல். 8056160481

<u>தொடர்புக்கு</u>

ஆயர்
9840198476


திரு. டேனிஸ் பிரபாகர், கன்வீனர்
9841851476



CSI படப்பை ஆண்கள் ஐக்கிய சங்கம்

**ஆண்களுக்கான குறுக்கு எழுத்துப்போட்டி**

தீத்து முழுவதும்




**இடமிருந்து வலம் :**

1. உத்தம குமாரன் யார் ?

2. தனக்கு ஒப்புவிக்கப்பட்ட எதினாலே தேவன் தமது வார்த்தையை வெளிப்படுத்தினார் என்று பவுல் சொல்கிறார் ?

7. நீ எல்லாவற்றிலும் எதற்கு உன்னை மாதிரியாகக் காண்பி என்று பவுல் கூறுகிறார் ?

8. நியாய சாஸ்திரியின் பெயர் ?

9. கிருபையினாலே நாம் ..................ஆக்கப்பட்டோம்.

**மேலிருந்து கீழ் :**

3. மூப்பரை ஏற்படுத்தும்படி தீத்துவை எந்த தீவிலே பவுல் விட்டு வந்தார் ?

4. கண்காணியானவன் ஆரோக்கியமான ............... புத்தி சொல்ல வேண்டும்.

5. விருத்த சேதனமுள்ளவர்களின் ............. அடக்க வேண்டும்

6. முதிர் வயதுள்ள ஸ்திரிகள் எதற்கு அடிமைப்படாமல் இருக்க வேண்டும்?

10. மனுஷனுடைய .....................க்கும் செவிகொடாமல்

**விடைகளை ஜுலை 25-ம் தேதிக்குள் அனுப்பவும்**

## ஜூன் மாதம் ஆண்களுக்கான
## குறுக்கு எழுத்துப்போட்டிக்கான விடைகள்

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 6→ தே | வ | 3↓ ஆ | வி | | | | | | | |
| 4→ ஒ | நே | சி | ப் | 2↓ போ | ரு | | | | | |
| | | யா | | த | | 8↓ 5→ தீ | மை | | | |
| | | | | 7→ க | லா | த் | தி | யா | | |
| | | | | ன் | | 9→ து | 10↓ ரோ | | | |
| | | | | | | 1→ மா | ய | ம | ற் | ற |

ஆண்கள் ஐக்கிய சங்கம், படப்பை




### ஜூலை மாதம்
### திருமறை ஆய்வு – Bible Study

“கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.” சங். 1:2

பிரதி புதன்கிழமை மாலை 7.30 மணி முதல் 8.30 மணி வரை ஆண்கள் ஐக்கிய சங்கத் திருமறை ஆய்வு நடைபெறும்.

| | | |
|---|---|---|
| முதல் வாரம் | 01.07.2026 – | **திரு. முத்துராஜ்** |
| இரண்டாம் வாரம் | 08.07.2026 – | **Dr கிறிஸ்டோஃபர் பாஸ்கர்** |
| மூன்றாம் வாரம் | 15.07.2026 – | **திரு. பால்ராஜ்** |
| நான்காம் வாரம் | 22.07.2026 – | **திரு. சாலமோன் சந்திரபாபு** |
| ஐந்தாம் வாரம் | 29.07.2026 – | **திரு. லூக் ஜெயராஜன்** |

ஆயர்
**9840198476**

திரு. பெனடிக்ட் ஆபிரகாம்
கன்வீனர்
**9443011345**



## மூத்தோர் பகுதி

கர்த்தரின் மகத்தான நாமத்தினாலே மூத்தோர் ஒவ்வொருவருக்கும் என் அன்பான வாழ்த்துக்களையும் ஸ்தோத்திரங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

“கர்த்தரை முகமுகமாய் அறிந்த மோசேயைப் போல ஒரு தீர்க்கதரிசியும் இஸ்ரவேலில் அப்புறம் எழும்பினதில்லை” உபாகமம் 34.12

தேவன் தம்முடைய மாபெரும் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக மோசேயை ஒரு தலைவராகவும், மீட்பராகவும், தீர்க்கதரிசியாகவும் வல்லமையுடன் பயன்படுத்தினார். மேலும் அவரை பெயர் சொல்லி அழைத்து அறிந்திருந்தார். மோசே தம்முடைய பலவீனங்களைக் கண்டு தாங்கியே தேவனுடைய வல்லமையை நம்பிக் கீழ்ப்படிந்தார்.

மோசே நியாயப்பிரமாணத்தின் பிரதிநிதியாவார். கிறிஸ்துவை முன்னறிவித்தவர்; தேவனுடைய சிநேகிதர். தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவராக இருந்தார். விசுவாசத்தில் பெரியவராயிருந்தார். அவர் தேவனிடமிருந்து நற்சாட்சியைப் பெற்றவர்.

மோசே மரிக்கும் போது 120 வயதாயிருந்தார். அவரது கண்கள் இருளடையவில்லை அவரது பெலன் குறையவில்லை. பூலோக கானானுக்குச் செல்ல அனுமதிக்கப்படாத மோசே பரலோக கானானுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார். மறுரூப மலையில் மோசே தோன்றியதன் மூலம் இயேசுவின் மூலமாக நியாயப்பிரமாணம் நிறைவேறுவதையும் இயேசுவே வாக்களிக்கப்பட்ட மேசியா என்பதையும் வெளிப்படுத்தினார். மோசேயின் வாழ்க்கை கடினமான சூழ்நிலைகளிலும் தேவனுடைய வார்த்தைக்கு முதலிடம் முதலிடம் கொடுப்பதும், உண்மையான கீழ்ப்படிதலுடன் வாழ்வதும் எவ்வளவு முக்கியம் என்பதை நமக்குக் கற்பிக்கிறது.

முகம் நமக்கு எவ்வளவு முக்கியமோ அது போல கால்களும் மிகவும் முக்கியமானவை. அவற்றை ஆரோக்கியமாகவும் வலுவாகவும், சுறுசுறுப்பாகவும் வைத்துக் கொள்வது அவசியமாகும். குறிப்பாக, கெண்டைக் கால்தசைகள் இரண்டாவது இதயம் என்று அழைக்கப்படுகின்றன. ஏனெனில், அவை புவியீர்ப்பு விசைக்கு எதிராக உடலின் கீழ்ப்பகுதிகளிலிருந்து ஆக்சிஜன் குறைந்த இரத்தத்தை மீண்டும் பிரதான இதயத்திற்கு மேல் நோக்கித் தள்ளும் முக்கியமான பாகமாக செயல்படுகின்றன. இந்த் இரண்டாவது இதயம் சரியாக இயங்காவிட்டால் இரத்த ஓட்டத்தில் தடைகள் ஏற்படலாம். அதன் விளைவாக

1. கணுக்கால் வீக்கம், கால்களில் கனம், தசைப்பிடிப்பு, கால்கள் மரத்துப்போதல்
2. நரம்புச் சுருள் வளர்ச்சி
3. இரத்தக் கட்டிகள் மற்றும் ஆழ் சிறை இரத்த உறைவு

நம் கால்கள் வலுவாக இருந்தால் நாம் நீண்ட காலம் சுறுசுறுப்பாகவும், ஆரோக்கியமாகவும், சுதந்திரமாகவும் வாழ முடியும்.

**வலிமையான கால்கள் நீண்ட ஆயுள்**


நம்முடைய கால்களைத் தள்ளாடவொட்டாமல், நம்முடை ஆத்துமாவை உயிரோடே காக்கிற கர்த்தர் தாமே நம்மையும், நம் பிள்ளைகளையும், நம் பிள்ளைகளின் பிள்ளைகளையும் ஆசீர்வதிப்பாராக!

திரு. **நவராஜ் ரவீந்திரன்**
கன்வீனர், மூத்தோர் ஐக்கியம்

## ஜூன் மாத வண்ணம் தீட்டுதல் போட்டியில் பங்கேற்ற பிள்ளைகள் :


| | | |
|---|---|---|
| ஆ. ஸ்டார் மீகா | – | 5–ஆம் வகுப்பு |
| மர்லியா பிளஸ்லி | – | 4–ஆம் வகுப்பு |
| M. ஃபீபி ஜொவானா | – | **L.K.G** |
| ஆ. அன்புராஜன் | – | 5–ஆம் வகுப்பு |
| ஏனோக் மாத்யூஸ் | – | **Pre-KG** |
| D. எலைஜா மிராக்கிளின் | – | 3–ஆம் வகுப்பு |
| S. இவான்தி | – | 5–ஆம் வகுப்பு |
| ஹாவிந்த் | – | 2–ஆம் வகுப்பு |
| டைலான் ரூபஸ் டேனியல் | – | 6–ஆம் வகுப்பு |
| ஜெரிக் நத்தானியேல் | – | **UKG** |
| ஆதவன் | – | 2–ஆம் வகுப்பு |
| S. டானிகா லியா | – | **L.K.G** |
| S. ஷெரில் பிளஸ்ஸி | – | 6–ஆம் வகுப்பு |
| ஷெர்ஷோன் | – | 3–ஆம் வகுப்பு |
| ஆ. மைக்கேல் ராஜா | – | **L.K.G** |
| கெஸ்டர் டேபட் டேனியல் | – | 4–வயது |
| V. காலேப் ஆரோன் | – | 7–ஆம் வகுப்பு |
| D. தவிஸ் டாவின் | – | 5–ஆம் வகுப்பு |
| F. ஜெஸ்லின் | – | **L.K.G** |
| S. ஜெனிட்டா மேரி | – | 6–ஆம் வகுப்பு |
| M. சைன் ஐசக் | – | 3–வயது |
| ஷெர்லின் சான்ட்ரா | – | 4–ஆம் வகுப்பு |
| F. பிளஸ்வின் | – | 4–ஆம் வகுப்பு |
| F. அபிஷா | – | 7–ஆம் வகுப்பு |
| ஆ. ஐடா ஏஞ்சலின் | – | 2–ஆம் வகுப்பு |
| ஜே. அதிரையன் | – | 4–ஆம் வகுப்பு |
| ஜே. அதிரியா | – | 4–ஆம் வகுப்பு |
| ஜா. ராபின்சன் | – | 5–ஆம் வகுப்பு |





## சிறுவர் பகுதி வண்ணம் தீட்டுதல்

(10 வயதுக்கு உட்பட்ட சிறு பிள்ளைகள் மட்டும்)



**பெயர் :**

**வகுப்பு :** **கையொப்பம்**

**வண்ணம் தீட்டிய படத்தை ஜூலை 25–ம் தேதிக்குள் ஆலயத்தில் சேர்க்கவும்.**

வண்ணம் தீட்டி அனுப்புகிறவர்கள் தங்கள் பெயரைத் தமிழில் தெளிவாக எழுதவும்.